பக்கங்கள் 15+6

மாலை முரசு


கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 26 சனிக்கிழமை 09.03.2024 அதிர்வு 222

## 6 மீனவர்கள் சிறைப்பிடிப்பு: தொடர்கின்றது போராட்டம்



04




### வயிற்றில் விழுந்த அடியால் தெருவுக்கு வந்த சிங்கள மக்களே அரகலவை நடத்தினர்

# ‘அறிவிலி’ கோட்டாவே பொய் சொல்லாதீர்!

### நீர் புத்தகம் எழுதி இருக்கவே தேவை இல்லை என்று மனோ பதிலடி

“சிங்கள பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதாலேயே தனக்கு எதிரான உள்நாட்டு - வெளிநாட்டு சக்திகள் ஒன்று திரண்டு அரகலவை நடத்தினார்கள் என்று தன் நூலில் கூறும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வரலாற்றுக் குற்றங்களில் இருந்து இன்னமும் கூட பாடம் படிக்காத ஒரு அறிவிலி.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

04



## வடக்கின் பிரதம செயலாளராக இளங்கோவன் 15 இல் நியமனம்



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண பிரதம செயலாளராகத் தற்போதைய ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் எதிர்வரும் 15ஆம் திகதி நியமிக்கப்படவுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் செயலாளராகவும், கல்வி அமைச்சின் செயலாளராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.

நீண்ட காலம் தொடர்ச்சியாக வடக்கில் பணியாற்றிய அவர், பின்னர் கொழும்புக்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், கடந்த இரண்டு

04

## குடாநாட்டில் நாளை 68.57 ஏக்கர் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். குடாநாட்டில் படையினர் வசமுள்ள 68.57 ஏக்கர் நிலங்கள் நாளை விடுவிக்கப்படவுள்ளன என்று மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

குடாநாட்டில் தற்போது படையினர் வசமுள்ள 3 ஆயிரத்து 412 ஏக்கரில் இருந்து 68.57 ஏக்கர் விடுவிக்கப்படுகின்றது. இதற்கான நிகழ்வு நாளை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறு விடுவிக்கப்படும் நிலங்களில் காங்கேசன்துறையில்

04



# மரக்கறிகளின் விலைகள் குறைப்பு

பேலியகொட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலைகள் இன்று சனிக்கிழமை குறைவடைந்துள்ளன.

அதன்படி , ஒரு கிலோ முள்ளங்கி 50 ரூபாவாகவும் , வெங்காயத்தாள் 100 ரூபாவாகவும், ஒரு கிலோ கரட் 200 ரூபாவாகவும், ஒரு கிலோ பூசணிக்காய் 250 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளன.

மேலும், ஒரு கிலோ கத்தரிக்காய் 120 ரூபாவாகவும், ஒரு கிலோ முட்டைக்கோஸ் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ பீட்ரூட் 220 ரூபாவாகவும், ஒரு கிலோ பீன்ஸ் 280 ரூபாவாகவும், ஒரு கிலோ தக்காளி 250 ரூபாவாகவும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 300 ரூபாவாகவும் , ஒரு கிலோ கறி மிளகாய் 400 ரூபாவாகவும், ஒரு கிலோ தேசிக்காய் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ இஞ்சி 1,800 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளன.

# ஒரு பாதைக்கு ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன



பராமரிப்புப் பணிகள் காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து வெள்ளவத்தை ரயில் நிலையம் வரையான பகுதியில் ஒரு பாதைக்கு ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி இன்று முதல் 3 நாட்களுக்கு போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொம்பனித்தெரு வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி ரயில் நிலையங்களுக்கு இடையில் பாலம் ஒன்றின் பராமரிப்பு பணிகள் மற்றும் நீர் வழங்கல் சபையின் குழாய் பதிக்கும் பணிகள் காரணமாகவே இவ்வாறு போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக கரையோர ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படக்கூடும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிலாபத்தில் குடும்ப தகராறு காரணமாக கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

குடும்ப தகராறு காரணமாக மருமகன், மாமனாரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் என சிலாபம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபத்தில் நேற்றிரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மயில்குளம் பகுதியைச் சேர்ந்த 81 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது மாமனாரை கொலை செய்த மேற்படி மருமகன், பின்னர் சில மருந்து மாத்திரையை உட்கொண்டுள்ளார். இதனையடுத்து, அவர் உடனடியாக சிகிச்சைக்காக சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# வடக்கின் பெரும்போரில் யாழ். பரியோவான் வெற்றி

**(பிரபாகரன் டிலக்சன்)**

117ஆவது வடக்கின் 'பெரும் போர்' கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

117 ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஏழாம் திகதி ஆரம்பித்து நேற்று (8), இன்று (9) என மூன்று நாட்கள் இரண்டு இன்னிங்ஸ்களாக நடைபெற்றது.

நேசகுமார் எபனேசர் ஜெஷில் தலைமையிலான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் நிசாந்தன் அஜய் தலைமையிலான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் களமிறங்கின.

போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (07) காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

பின்னர் போட்டிக்கான நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல் நாளிலேயே 56.4 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில, சயந்தன் 55 ஓட்டங்களையும் நியூட்டன் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி சார்பாக கவிசன் 5 விக்கெட்டுகளையும், மாதுளன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி 70.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்மூலம் முதல் இன்னிங்ஸில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 71 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது.

பரியோவான் கல்லூரி சார்பாக அணித்தலைவர் ஜெஷில் 52 ஓட்டங்களையும், அபியோசுவாந்த், சச்சின் கணபதி ஆகியோர் தலா 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக அபிலாஷ், முரளி திசோன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுகளைப் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, 57.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பபாக அஜய் 23 ஓட்டங்களையும், சிமில்டோன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி சார்பாக கஜகர்ணன், அசந்த் சாம்சன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளைப் கைப்பற்றினர்.

பின்னர் பதிலுக்கு 79 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய பரியோவான் கல்லூரி, 15 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 81 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றியிலக்கை அடைந்தது,

இதன் மூலம் 117ஆவது வடக்கின் பெரும் போர் போட்டியில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

அந்த அணி சார்பாக இரண்டாவது இன்னிங்ஸில் அபியோசுவாந் 50 ஓட்டங்களையும் சச்சின் கணபதி 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

117ஆவது வடக்கின் பெரும்போர் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். மத்திய கல்லூரி வீரர் சயந்தனும், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வீரர் கவிசனும், சிறந்த சகலதுறை வீரராக யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வீரர் ஜெஷிலும், போட்டியின் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வீரர் அபியோசுவாந்தும் தெரிவாகினர்.



# கப் ரக வாகனம் மோதி மூவர் பரிதாப மரணம்

## இருவர் படுகாயம்

கோர விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த விபத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ரம்பேவ – அநுராதபுரம் ஏ – 20 பிரதான வீதியின் 13ஆம் மற்றும் 14ஆம் மைல் கற்களுக்கு இடையே இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்வையிடச் சென்றவர்கள் மீது கப் ரக வாகனமொன்று மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதனையடுத்து குறித்த கப் ரக வாகனத்துடன் அதன் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.




இந்தநிலையில், அந்தக் கப் ரக வாகனத்துடன் அதில் பயணித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தை ஏற்படுத்திய கப் ரக வாகனத்தை 18 வயதுடைய நபரே செலுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

விபத்தில் 15, 19 மற்றும் 21 வயதுடைய மூவர் பலியாகியுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 'அறிவிலி' கோட்டாவே...

"சிங்கள – பௌத்தர் பலமடைவது இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல. சிங்கள மொழி பேசுவதன் மூலமும், பௌத்த தரிசனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும் நானும் கூட சிங்கள – பௌத்த சிந்தனையைப் பலப்படுத்தி வருகின்றேனே! எமக்கு அதில் என்ன பிரச்சினை?" – என்றும் மனோ எம்.பி. கேள்வி எழுப்பினார்.

"இந்நாட்டில் சிங்கள – பௌத்தம், பேரினவாதமாக மாறி, பல இனங்கள், பல மதங்கள், பல மொழிகள் என்ற இலங்கைப் பன்மைத்துவதை இல்லாது ஒழிப்பதே எமது பிரச்சினை. அதுதான் எமது நீண்டகால போராட்டம். உங்கள் அரகலயவுக்கும் இதற்கும் தொடர்பு கிடையாது" – என்றும் மனோ எம்.பி. சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள 'சதி' என்ற நூல் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் கருத்துக் கூறிய மனோ எம்.பி. மேலும் குறிப்பிட்டதாவது:–

"கொழும்பிலும், நாடு முழுக்கவும் நடைபெற்ற அரகலவில் பங்குபற்றிய மக்களில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது சதவிகிதத்தினர், 2019, 2020 தேர்தல்களில் மொட்டுச் சின்னத்துக்கு, வாக்கு அளித்தவர்கள். அவர்கள்தான், கோட்டாபயவின் முட்டாள்தனமான, பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக வயிற்றில் பாரிய அடி விழுந்ததுடன் தெருவுக்கு வந்து போராடியவர்கள்.

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கூட இவை பிரச்சினைகள்தான். ஆனால், அவற்றையும் மீறிய இன, மத ஒடுக்கு முறைகளால் அவர்கள் துன்பம் அடைந்தார்கள். ஆங்காங்கே ஒரு சில தமிழ், முஸ்லிம் மக்கள் இறுதிக் கால கட்டங்களில் அரகலவில் கலந்து கொண்டார்கள். சில அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அதீத கற்பனை பண்ணிக்கொண்டு, "இத்தோடு சேர்த்து இந்நாட்டில் இனவாதத்தையும் ஒழித்து விடுவோம்" என முழங்கியதும் உண்மைதான். "நல்லது நடந்தால் சரி" என நாம் அவர்களை வாழ்த்தியதும் உண்மைதான். அவர்கள் இன்று அரசியல் அரங்கில் அந்த அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்களைக் காணவில்லை.

எது எப்படி இருந்தாலும், அரகல முழுக்க முழுக்க, வயிற்றில் பாரிய அடி விழுந்ததுடன், தெருவுக்கு வந்த சிங்கள பெருந்திரள் மக்களால் நடத்தப்பட்டது ஆகும். அதுவும் 2019, 2020 தேர்தல்களில் மொட்டுச் சின்னத்துக்கு வாக்களித்த மக்களால் நடத்தபட்டது. இதுதான் உண்மை. சிங்கள – பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்கு பிடிக்காததாலேயே, அவர்கள் அரகலவை நடத்தினார்கள் என்ற மாதிரி கூறி, உண்மையைத் திரிபுபடுத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடுமையாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்." – என்றுள்ளது.

### 6 மீனவர்கள்...

சீஷெல்ஸில் ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் பிடியில் இருந்து மீட்கப்பட்டு அந்த நாட்டின் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையின் கடற்றொழிலாளர்கள், இன்று 9ஆவது நாளாகவும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்கின்றனர்.

தம்மை உடனடியாகச் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பக் கோரி மார்ச் 1ஆம் திகதி அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

லொரென்சோ புத்தா 4 என்ற பல நாள் மீன்பிடி இழுவை படகில் பயணித்த 6 பேரே இந்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

லொரென்சோ புத்தா 4 என்ற விசைப்படகு ஜனவரி 12 ஆம் திகதி திக்கோவிட்ட துறைமுகத்தில் இருந்து தனது முதல் பயணமாகப் புறப்பட்டது.

இந்தநிலையில் அதில் பயணித்த 6 பேரும் சிலாபம் மாரவில பிரதேசத்தில் வசிப்பவர்கள் மற்றும் அவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஆயுதம் தாங்கிய குழுவொன்றால் அவர்கள் பிடிக்கப்பட்டனர்.

எனினும், பின்னர் சீஷெல்ஸ் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் அவர்கள் மீட்கப்பட்டனர்.

இதனையடுத்தே அவர்கள் தற்போது சீஷெல்ஸ் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### வடக்கின்...

வருடங்களாக ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராகப் பணியாற்றும் எல்.இளங்கோவன், இம்மாதம் 15 ஆம் திகதி முதல் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்படுகின்றார்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தின் தற்போதைய பிரதம செயலாளர் சமன் பந்துலசேன ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

இதற்கான அறிவித்தல் நேற்று தொலைபேசி ஊடாக வழங்கப்பட்டுள்ள நிலையில், நாளைமறுதினம் திங்கட்கிழமை எழுத்தில் வழங்கப்படவுள்ளது.

### குடாநாட்டில்...

20.03 ஏக்கரும், தென்மயிலையில் 24.9 ஏக்கரும், அரியாலையில் 0.45 ஏக்கரும், வறுத்தளைவிளானில் 23.27 ஏக்கரும் அடங்குகின்றன.

அந்த நிலங்களுக்கான உரிமையாளர்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.




# சர்வதேசமே திரும்பிப் பார்! ஐ.நாவே நீதி எங்கே?

## முல்லைத்தீவில் உறவுகள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தின் 2209 ஆவது நாளில் நீதிக்கான மாபெரும் எழுச்சி பேரணி நேற்று முல்லைத்தீவில் இடம்பெறறது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் வடக்கு – கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டவர்கள், சர்வதேசத்திடம் நீதி கோரி பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெளிநாட்டு சதி வலையா?

முன்பின் அரசியல் அனுபவமே இல்லாத ஒருவரை, பெரும் அரசியல் தலைவர் போன்ற பிம்பத்தை ஏற்ப டுத்தி, அதிகாரத்துக்குக் கொண்டு வந்து, நாட்டையே குறுகிய காலத் தில் குட்டிச்சுவராக்க வைத்த மொட்டு கட்சி, தாம் அரசியலுக்குப் பெரும் ஆரவாரத்துடன் கூட்டி வந்த அந்த பிரமுகரின் அரைகுறை அரசி யல் அறிவு தொடர்பில் இப்போதும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண் டியதாகத்தான் இருக்கின்றது.

முன்னர் அரசியலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலோ அல்லது குறைந்த பட்சம் தமது பிரதேசத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சாதாரணக் கிளைக் குழுத் தேர்தலிலோ கூட பங்கு பற்றாத ஒருவரை, பாது காப்பு அமைச்சின் செயலாளராக இருந்து நாட்டின் உள்நாட்டு யுத்தத் தில் நம்ப முடியாத வெற்றியைத் தேடித் தந்த பெருந்தகை என்ற படத்துடன் நாட்டின் ஜனாதிபதி பதவிக்கு ஆரவார எடுப்புகளுடன் இழுத்து வந்தது அவரது மொட்டுக் கட்சி.

ராஜபக்ஷக்களின் சகோதரர்களில் ஒருவர் என்ற தகைமையை மட்டும் வைத்துக்கொண்டு, ஜனாதிபதி தேர் தலுக்கு இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இருந்தே அடுத்த ஜனாதி பதித் தேர்தலில் அவரை ஜனாதிபதி யாக்கும் திட்டங்கள், வியூகங்கள் வகுக்கப்பட்டு, பெருத்த எடுப்பில் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. 'வியத்மக', 'எலிய' போன்ற புத்திஜீவிகள் அமைப்புகள் உருவாக் கப்பட்டு, பல நூறு கோடி ரூபா செலவில் ஏற்பாடுகள், தடல்புடல் ஒழுங்குகள் எல்லாம் நேரத்துட னேயே செய்யப்பட்டன.

கோட்டாபய ராஜபக்ஷவை அடுத்த பெரும் தலைவராகக் காட்டும் ஆரவாரம் பெரும் அமளியாக முன்னெ டுக்கப்பட்டது. அவர் 69 லட்சம் வாக்குகளுடன் ஜனாதிபதியானார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவர் அப்பதவிக்கு வருவதற்கு இரண்டரை வருடங்களுக்கு மேல் தடல் புடல் ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஆனால் அவரால் இரண்டரை வருடங்கள் கூட பதவியில் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பதவியையும் நாட்டையும் விட்டு விட்டு ஓடித் தப்ப வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

அப்படி நாட்டை விட்டு ஓடும் அனுபவம் கிடைத்த பின்னரும் கூட, ஒரு வளர்ந்த - தேர்ச்சி மிக்க - அனுபவ முடைய - அரசியல்வாதியாக அவர் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை என்பதுதான் துரதிர்ஷ்டம்.

இப்போது வெளியாகியிருக்கும் அவரது புத்தகம் அதைத்தான் காட்டுகி றது. பெருந்தொகை நிதியை இழக்கும் விதத்தில் வரி விலக்கைக் கண் மூடித்தனமாக அறிவித்தமை, அசே தன இரசாயனங்களுக்குத் ஒரே நாளில் தடைவிதித்தமை என்று முட்டாள் தனமான முடிவுகள் எடுத்து, நாட்டைப் பெரும் பொருளாதாரக் குழப்பத் துக்குள் ஆழ்த்திவிட்டு, தமது தோல் விக்கும், அதனால் ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடிக்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பின்னப்பட்ட சதி வலையே காரணம் என்று தமது புத் தகத்தில் கயிறு விடுகின்றார் கோட்டா பய.

அவர் குறிப்பிடும் அந்த சர்வதேச சதி வலையில் எந்த நாடு அல்லது எந்தத் தரப்பு சம்பந்தப்பட்டது என்பதை கூட அவரால் கோடி காட்ட முடியவில்லை. அதற்கான திராணி கூட அவருக்கு இல்லை என்பதையே அவரது புத்தகமே நிரூபிக்கின்றது.

தமது பதவி விலகலுக்கு வெளி நாட்டு சதிவலைதான் காரணம் என்று கோட்டாபய கூறும் விளக்கம் உண்மை யாயின், அந்தத் தரப்புகளை, பதவி இழந்து இரண்டரை வருடங்கள் கழிந் தும், பகிரங்கமாக அம்பலப்படுத்தும் திராணி அவருக்கு இல்லை என்றால், அவர் என்ன அரசியல் தலைவர்? வெறும் தூசுக்குக் கூட ஒப்பானவர் அல்லர்.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்து, அதனைக் கொடூரமான - குரூரமான - நடவடிக்கை முறை களில் அழித்தொழிப்பதற்காக வெளி நாடுகளுடன் சதிவலை பின்னி, வெற்றி கரமாக திட்டத்தை ஒப்பேற்றிய கோட்டாபய, இப்போது தனது முட் டாள்தனத்தினால் பதவியை விட்டு ஓட வேண்டி வந்த தமது பரிதாப நிலையை மூடி மறைப்பதற்கு, வெளி நாட்டுச் சதி வலை என்ற கப்ஸாவைத் தூக்கி நிறுத்துகின்றார்.

அந்தத் தரப்புக்கள் - அந்த நாடுகள் - யார் அல்லது எது என்பதை பகிரங்க மாக அவர் தெரிவிக்க முன்வராத வரையில், யாரும் அவரின் இந்தக் கயிற்றை நம்ப மாட்டார்கள் என்பது திண்ணம்.



# முன்னேஸ்வரத்தில் சிவராத்திரி நிகழ்வு

(ரஸீன் ரஸ்மின்)

பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும், புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும், சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னை நாதசுவாமி தேவஸ்தானத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வுகள் நேற்று மாலை முதல் இன்று அதிகாலை வரை இடம்பெற்றன.

லிங்கோற்பவருக்கு விஷேட பூசை வழிபாடுகளும், விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெற்று சிவராத்திரி பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம் பெற்றன.

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னை நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஆலய பிரதான குருவும், தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ எஸ்.பத்மநாபக் குருக்கள் தலைமையில் இந்த மஹா சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது, நேற்று மாலை 3 மணிக்கு மஹாபிரதோஷ 108 சங்காபிஷேகம் சாயரக்ஷை பூஜையும், இரவு 7 மணிக்கு முதலாம் சாம பூஜையும் தொடர்ந்து இரண்டாம் கால பூஜையும் இடம்பெற்றன.

மேலும், இரவு 10.30 மணிக்கு இரண்டாம் சாம பூஜையும், அதிகாலை நள்ளிரவு மணிக்கு மூன்றாம் சாம பூஜையும், அதிகாலை 3.30 மணிக்கு நான்காம் பூஜையும் தொடர்ந்து மஹா சிவராத்திரி தீர்த்த வாரி நிகழ்வும் இடம்பெற்றன.

ஒவ்வொரு சாம பூஜையிலும் ஆதி லிங்கமாகிய ஸ்ரீலிங்கோத்பவ பெருமானுக்கு நவகலச ஸ்நபன அபிஷேகமும், ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னநாதசுவாமிக்கு சிவாகம விதிப்படி அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும், விஷேட பூஜையும் இதன்போது இடம் பெற்றன.

இந்த மஹா சிவராத்திரி நிகழ்வுகளிலும், விஷேட பூஜை வழிபாடுகளிலும் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.











# ஆதி சிவனாலயத்தில் சிவலிங்க அபிஷேகம்



**(வி.ரி.சகாதேவயராஜா)**

காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தில் மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை மாலை சமுத்திர தீர்த்தம் எடுத்துவந்து ஆதி சிவனாலயத்தில் சிவலிங்க அபிஷேகம் செய்யப்பட்டது.

ஊர்வலத்துடனான இந்த நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சிவலிங்கத்திற்கு ஆலயத்தால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் பக்தர்கள் சமுத்திர தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தனர்.

பிரதேச செயலகம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், ஆதிசிவன் ஆலயம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

காலையில் மாணவரிடையே குருத்தோலை பின்னுதல், நிறைமுட்டி வைத்தல், கோலம் போடுதல் போன்ற பாரம்பரிய பண்பாட்டு போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.


















# கிழக்கு சமூக சேவை சபையால் கல்வியலாளர்கள் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

அரசியல் ஆளுமைகளை நினைவு கூருதலும், இம்முறை பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாண வர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கிழக்கு சமூக சேவைச் சபையின் தலைவர் யூ.எல்.ஏ ரஹ்மான் தலைமையில் நேற்று கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கலந்து கொண்டு மாணவர்கள் மற்றும் கல்வியலாளர்களை கௌராவித்தார்.

கௌரவ அதிதிகளாக உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மைமூனா அஹமட், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை, கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸீல், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர், கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். றியாழ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம். ஏ. கலீலூர் ரஹ்மான், ஏ.எம். றியாஸ் (பெஸ்டர்), திருமதி பஸீரா றியாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம், வெகுஜன தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். /ஹுதா, கல்முனை பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி மற்றும் உதவி அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், கல்வியலாளர்கள், நலன் விரும்பிகள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, பல துறைகளில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சுமார் 75 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், சிறந்த ஆளுமைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெற்றது.






















# இணையவழி பாதுகாப்பு சட்டம் குறித்து ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு





(ஏ. எச். ஹஸ்பர்)

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துக் களை வெளிப்படுத்தும் உரிமைக்கான பொறுப்புக்கள் எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வொன்று இன்று திருகோணமலையில் உள்ள சர்வோதய நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த செயலமர்வை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது இணையவழி பாதுகாப்பு சட்டம் தொடர்பிலும், அதன் மூலமான சட்டம் எவ்வாறாக காணப்படுகிறது என்பது குறித்தும் தெளிவூட்டப்பட்டது.

இதில் சுதந்திர ஊடக இயக்கத்தின் முக்கியஸ்தர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நிந்தவூர் ஆதார வைத்தியசாலை நேற்று பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.பி.அப்துல் வாஜித் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

“பலம் மிக்க பெண்கள் நாட்டின் வளம். பெண்கள் சமுதாயத்தில் முதலீடு செய்யுங்கள், முன்னேற்றத்தை துரிதப்படுத்துங்கள்“ எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.











# தொழில் வழிகாட்டுதல் மூலமாக 3 ஆம் நிலை கல்வியை ஊக்குவித்தல்

(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி செயற்திட்டம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவினால் மூன்றாம் நிலைக்கல்வியை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்ட முதலாவது முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தர பரீட்சையை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு க.பொ. த உயர்தரம் ஆரம்பிக்கும் வரையிலும், உயர்தர பரீட்சையை நிறைவு செய்து பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் காலத்திலும் அவர்களை பாடசாலையில் தக்க வைத்து இந்த முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய தெரிவு செய்யப்பட்ட கல்லூரிகளில் ஒன்றான கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியில் சம்பிரதாய பூர்வமாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது .

கடந்த செவ்வாய் கிழமை கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ரசீக் பரீட் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதிகளாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி, கல்முனை வலையக்கல்வி அலுவலகம் சார்பில் ஆசிரிய ஆலோசகர் எம். எம். சியாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலகத்தின் திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.எம். றிபாதுவால் தொழில் வழிகாட்டல் நிகழ்வு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் புனித நோன்பு பெருநாள் சொற்பொழிவு







கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் புனித ரமழானை வரவேற்கும் முகமாக நோன்பு காலத்தில் மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான மார்க்க சொற்பொழிவு நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ. அப்துல் றஸாக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அல் ஹாமியா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி ஏ.ஸி.தஸ்தீக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# புதுமுகத்துவாரம் சப்தரிஷி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற மகாசிவராத்திரி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் சப்தரிஷி காயத்திரி ஆலயத்தில் நேற்று மகா சிவராத்திரி நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது சமூத்திரத் தீர்த்தம் எடுக்கப்பட்டு காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டது. இதில் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு ம்ருத்ஞ்ஜய யாகம் இரவு 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு, முதலாம் ஜாமப்பூஜை கல்லடி நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்களாலும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஜாமப் பூஜைகள் காயத்திரி குடும்பத்தினராலும் செய்யப்பட்டது.

இதனைச் சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு சைவத் திருநெறி மன்றத்தினரால் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு அரங்கேற்றம் செய்யப்பட்டது.













# காணாமல் போன மீனவர்கள் இரண்டு நாள்களின் பின் மீட்பு



(ரஸீன் ரஸ்மின்)

கடல் தொழில் நடவடிக்கைகளுக்காக கடந்த 6 ஆம் திகதி மூன்று பேருடன் கடலுக்குள் சென்று காணாமல் போன இயந்திர படகு மற்றும் அதில் பயணித்த மீனவர்கள் மூவரும் நேற்று பாதுகாப்பாக கரை திரும்பியுள்ளனர்.

கடல் தொழில் நடவடிக்கைகளுக்காக மூன்று மீனவர்கள் பயணித்த இயந்திர படகு கரை திரும்பவில்லை என அந்த இயந்திர படகின் உரிமையாளர் கற்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் 6 ஆம் திகதி காணாமல் போனதாக கூறப்படும் இயந்திர படகுடன் ஈச்சங்காடு பகுதியைச் சேர்ந்த 21, 37 மற்றும் 38 வயதுடைய மூன்று மீனவர்களும் இரண்டு நாட்களின் பின்னர் நேற்று மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இயந்திர கோளாறு காரணமாக மேற்படி படகு இயங்காமல் போனதாகவும், பின்னர் கடலில் மிதக்க ஆரம்பித்த படகு இந்திய கடல் எல்லையோரம் வரை சென்றதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், மூன்று மீனவர்களும் உணவு, குடிதண்ணீர் இன்றி இரண்டு இரவுகளை கடலில் கழித்துள்ளனர். இந்திய மீன்பிடிப் படகில் பயணித்த மீனவர்கள் இவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் என்பவற்றை வழங்கியுள்ளனர் என தெரியவந்துள்ளது.



# அல் அமானா நற்பணி மன்றம் சத்திரசிகிச்சைக்கு நிதியுதவி

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது அல் அமானா நற்பணி மன்றத்தினால் சத்திரசிகிச்சைக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வும், மன்றத்தின் ஒன்றுகூடலும், ஊடக சந்திப்பும் அமைப்பின் தலைவர் ஏ.எல்.ஏ. பரீட் ஹாஜி அவர்களது தலைமையில் இடம்பெற்றன.

சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள அமைப்பின் காரியாலயத்தில் நேற்று இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது, சாய்ந்தமருதைச் சேர்ந்த பெண் ஒருவரின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை தேவைக்காக ஒருதொகை நிதி அவரது உறவினரிடம் கையளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அல் அமானா நற்பணி மன்றத்தின் செயற்பாடுகள் அதன் உருவாக்கம் தொடர்பில் விரிவாக அமைப்பின் தலைவர் எடுத்துரைத்தார்.

1986 ஆம் ஆண்டு அன்ஸாரிகள் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, அந்த சங்கத்தினூடாக மீனவர்களின் இழப்புக்கள் நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் மதம் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.




# மாநிலங்களவை ஒன்றில் கமலுக்கு ஆசனம் ஒதுக்கீடு

## தி.மு.க. - ம.நீ.ம. கூட்டணி ஒப்பந்தம்

மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி இணைந்துள்ளது . எனினும், ம.நீ.ம. மக்களவைத் தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக மாநிலங்களவை தேர்தலில் அக்கட்சிக்கு ஒரு ஆசனம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று தி.மு.க. ஒப்பந்தம் செய்துள்ளது.

தி.மு.க. கூட்டணியில் நடிகர் கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி இணையவிருப்பதாக கடந்த சில நாட்களாகவே செய்திகள் வெளியாகிவந்தன.

அதை உறுதிப்படுத்தும் வகையில் கமலும் கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து வருகின்றேன் என வெளிப்படுத்தி இருந்தார்.

தொடர்ந்து தி.மு.க. உடன் மக்கள் நீதி மய்யம் மறைமுகமாக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வந்ததாக சொல்லப்பட்ட நிலையில், தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க. குழுவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவருமான கமல்ஹாசன், இன்று தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் சென்றார்.

அவரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றார். பின்னர் முதல்வர் ஸ்டாலினை சந்தித்த கமல்ஹாசன், தொகுதி பங்கீடு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அதன்படி, தி.மு.க. கூட்டணியில் இணைந்துள்ள ம.நீ.ம. மக்களவைத் தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக மாநிலங்களவை தேர்தலில் அக்கட்சிக்கு ஒரு ஆசனம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று தி.மு.க. ஒப்பந்தம் செய்துள்ளது. அதற்கு பதில் மக்கள் நீதி மய்யம் மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ளும் என்றும் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் தொடர்பில் தி.மு.க. அரசுக்கு எதிராக மனித சங்கிலிப் போராட்டம் நடத்தவுள்ளது அ.தி.மு.க.!

போதைப் பொருள் கடத்தலால் இந்திய அளவில் தமிழகம் தலை குனிந்து இருப்பதற்கும் காரணமான நிர்வாகத் திறனற்ற தி.மு.க. அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், அ.தி.மு.க. சார்பில், எதிர்வரும் 12 ஆம் திகதி மனித சங்கிலிப் போராட்டங்கள் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து, தமிழகத்தில் போதைப் பொருட்களின் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டே இருப்பதை, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் பலமுறை சட்டமன்றப் பேரவையில் எடுத்துரைத்தேன்.

பொதுவெளியில் கட்சியின் சார்பில் தொடர்ச்சியான போராட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், அறிக்கைகள் என்று போதைப் பொருள்களின் நடமாட்டத்தைத் தடுக்க வேண்டும் என்பதற்காக அ.தி.மு.க. தொடர்ந்து களத்தில் நின்று போராடி வருகிறது. ஆனாலும், தி.மு.க. அரசு இந்த விடயத்தில் அலட்சியப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது.



தமிழகத்தில் போதைப் பொருள்களின் அதிகரிப்பால் கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர்களுடைய வாழ்க்கை பெரிதளவும் பாதிப்படைந்து இருக்கிறது. இதனால், பெற்றோர்கள் சொல்லொணா துயரத்துக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இந்த போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுக்காமல் வாய் மூடி, கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது தி.மு.க. அரசு.

எனவே, தி.மு.க. அரசைக் கண்டித்து, தமிழகம் போதைப் பொருள்களின் தலை நகரமாக மாறி, வருங்கால தலைமுறையினரின் வாழ்க்கை சீரழிந்து வருவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்திலும், போதைப் பொருள் கடத்தலால் இந்திய அளவில் தமிழகம் தலை குனிந்து இருப்பதற்கும் காரணமான நிர்வாகத் திறனற்ற தி.மு.க. அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், அ.தி.மு.கவின் சார்பில மாபெரும் மனித சங்கிலிப் போராட்டங்கள் நடைபெறும்.

இந்த மனித சங்கிலிப் போராட்டங்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை, சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. அரசைக் கண்டித்தும், வருங்கால தலைமுறையினரின் நலனை முன்வைத்தும் நடைபெற உள்ள இந்த மனித சங்கிலிப் போராட்டங்களில், சம்பந்தப்பட்டவர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.

தமிழகத்துக்கு தலைகுனிவை ஏற்படுத்தி உள்ள நிர்வாகத் திறனற்ற திமுக அரசைக் கண்டித்து நடைபெற உள்ள இந்த மனித சங்கிலிப் போராட்டங்களில், இளைஞர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.- என்றுள்ளது.



# நாள் ஒன்றுக்கு 63 பெண்கள் வீதம் காசாவில் கொல்லப்படுகின்றனர்

காசாவில் ஒரே இரவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

காசாவில்நாள் ஒன்றுக்கு சராசரியாக 63 பெண்கள் கொல்லப்படுகிறார்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் நடத்திய எட்டு தாக்குதல்களில் 78 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று காசாவில் உள்ள சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசாவில் ஒரே இரவில் இஸ்ரேல் நடத்திய ராணுவத் தாக்குதலில் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், காசாவுக்குள் கூடுதல் உதவிகளை அனுமதிக்க வேண்டும் எனவும் அப்பாவிகளின் உயிர்களைப் பாதுகாப்பது முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளார்.



பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம், மகளிர் தினத்தன்று காசாவில் பாலஸ்தீனப் பெண்களின் அவலநிலை குறித்து தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தற்போது வரை 9,000 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருக்கின்றனர்.


காசாவில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 63 பெண்கள் கொல்லப்படுகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

காசாவில் பலி எண்ணிக்கை 30,878 ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 72,402 ஆக உயர்ந்துள்ளது. இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆக அதிகரித்துள்ளது.

# பறந்த விமானத்தின் சக்கரம் வீழ்ந்ததால் அவசர தரையிறக்கம்

அமெரிக்காவில் பறந்துகொண்டிருந்த சர்வதேச விமானத்தின் சக்கரமொன்று கழன்று வீழ்ந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சான்பிரான்சிஸ்கோ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஜப்பானை நோக்கிப் புறப்பட்ட யுனைடெட் எயார்லைன்ஸ் விமானம் ஒன்றில் இருந்தே இவ்வாறு சக்கரம் கழன்றுள்ளது.




போயிங் 777 ரகத்தைச் சேர்ந்த குறித்த விமானம் தரையிலிருந்து புறப்பட்ட நிலையில் அதன் சக்கரமொன்று கழன்று, விமான நிலையத்தின் வாகனத் தரிப்பிடப் பகுதியில் வீழ்ந்தது.

இதனையடுத்து அந்த விமானம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜப்பானின் ஒசாகா நகரை நோக்கி புறப்பட்ட அவ்விமானத்தில் 249 பேர் இருந்தனர் என யுனைடெட் எயார் லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போயிங் 777 விமானத்தின் ஒவ்வொரு சக்கரத் தொகுதியிலும் 6 சக்கரங்கள் இருப்பதாகவும், ஏதேனும் ஒரு சக்கரம் சேதமடைந்தால் அல்லது தொலைந்தாலும் விமானம் பாதுகாப்பாக தரையிறங்கக் கூடிய வகையில் அவ்விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் யுனைடெட் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 06

# கனடா முரசு

சனிக்கிழமை 09/03/2024

## எட்டோபிகொக் பகுதியில் இளைஞர் சுட்டுக்கொலை!

ஒன்ராரியோ,மார்ச்09

எட்டோபிகொக் பகுதியில் 29 வயதான இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மார்ச் 7 வியாழக்கிழமை 02



## ஒட்டாவாவில் அறுவர் படுகொலை; தொடரும் நினைவு கூரல் நிகழ்வு!

ஒன்ராரியோ,மார்ச்09

மார்ச் 6ஆம் திகதி புதன்கிழமை கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் இடம்பெற்ற மிகக் கொடூரமான படுகொலைச் சம்பவத்தை அடுத்துப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் இறுதியாக வசித்திருந்த இல்லத்தின் அருகில் தொடர்ச்சியாக நினைவுகூரல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 02

## கியூபெக்கில் வானிலை வார இறுதியில் மோசம்


கியூபெக், மாரச்09

கியூபெக் மாநிலத்தில் வார இறுதியில் வானிலை கடுமையானதாக நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை முழுவதும் நீடிக்கும் மழைக் காலநிலையானது, அதிகளவு பனிப்பொழிவைக் கொண்டு வரவுள்ளமையால் ஞாயிற்றுக்கிழமை பயணிக்கும் பயணிகள் மற்றும் வாகனங்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தக் கூடும் என தெரிவிக்கப் படுகின்றது.

இதற்கு தகுந்தாற்போல் வார இறுதி பயணத் திட்டங்களை திட்டமிடுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ ஊடாக நகரும் தாழமுக்கமானது சனிக்கிழமை நண்பகலில் கியூபெக்கின் தென்பகுதியை நோக்கி நகரவுள்ளது.



பிற்பகலில் மேற்கிலிருந்து, கிழக்கு நோக்கி நகருவதால், இன்று சனிக் கிழமை மாலையே இந்த மழை மொன்ரியலை அடையவுள்ளது.

இன்று சனிக்கிழமை இரவில் இந்த மழையானது பனிப்பொழிவாக மாற வுள்ளது.



## ஒட்டாவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்மெடியோ பூங்காவில் இவர்களை நினைவுகூருவதற்கென தனியான தொரு இடம் ஒதுக்கப்பட்டு நூற்றுக் கணக்கான மக்கள் பூக்களை கொண்டு வந்து வைத்தும், படுகொலை செய்யப் பட்ட சிறுகுழந்தைகளுக்காக விளை யாட்டுப் பொருள்களைக் கொண்டு வந்து அடுக்கியும், தமது கவ கைளை பகிர்ந்து செல்கின்றனர்.

இந்த சம்பவத்தில் உயிர்தப்பிய தனுஷ்க விக்ரமசிங்கவுக்கு, கைகளில், முகத்தில் சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து, இவருடைய சகோதரரும், தந்தையும் விரைவில் வந்து இணைந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

19 வயது சந்தேகநபரின் சமூக ஊடகப் பக்கங்கள் குறித்த வலைத் தளங்களால் முடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கான GoFundMe என்ற சமூக நிதிசேகரிப்பு தளத்தின் ஊடாக நிதி சேகரிப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இறுதி மரணச் சடங்கிற்கு மாத்திரம் பெரும்தொகை அவசியமாக இருக்கும் என்பதால் இந்த முயற்சி ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில போலி GoFundMe நிதி சேகரிப்பு முயற்சிகளும் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்பதால், நிதி செலுத் துவதற்கு முன்னர் தகவல்களை சரிபார்க் குமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கோரி யுள்ளனர்.

வெளிநாடுகளில் புதிய சமூக மற்றும் உளவியல் சூழலுக்குள் பிரவேசிக்கும் இளைஞர்கள் தொடர்பில் பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என கனடாவில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பேஸ்புக் தளத்தில் எச்சரிக்கை செய்தி வெளி யிட்டுள்ளது.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கனேடிய பிரதமர், 'பயங்கரமான வன் முறை' என இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தாம் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் உதவுவதற்கு எப்போ தும் போல் கனடா உடன்நிற்கும் என அவர் தெரிவித்துள்ளார்



## எட்டோபிகொக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்று இடம்பெற்ற இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளைத் தாம் ஆரம்பித்துள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

மார்ச் 7ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்து விரைந்த பொலிஸார் பெருங் காயங்களுடன் இளைஞரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தபோதிலும், அவர் உயிர்தப்பவில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

CLICK HERE VIDEO

## till March 10th




LOWEST PRICE
3 for 10 $
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
10 Kg 19.99$
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
3L for 8.99$
Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE
LB 7.99$
Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE
LB 6.99$
Only at GUNAAM'S SUPER MARKET

Ceylon விளைமீன்

**Gunaam's super market இந்த வாரம் அள்ளித் தரும்**
மாபெரும் மலிவு விற்பனை பலசரக்குப் பொருட்கள் தாயகத்துப் பழவகைகள், மீன், இறைச்சி, மரக்கறி fresh ஆகவும் மிக மிக குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| Joy Papadam 5 for | - $ 5.00 |
| Kottu mee Noodles 6 for | - $ 5.00 |
| Mr.Groudas coconut milk powder 3 for | -$10.00 |
| Mr.Groudas Tin milk 3 for | - $10.00 |
| Blue sea Tin Fish 3 for | - $5.00 |
| 200g Gsp 5 for | - $ 5.00 |
| Ceycan குத்தரிசி | - $8.99 |
| Woodiya Tin fish 3 for | - $ 10.00 |
| Maharaya Curry Powder | - $ 11.99 |
| 3L sunflower Oil | - 8.99 |
| Mr.Goudas Sea Sah | - $ 1.49 |
| Mr.Goudas Table sah | - $ 1.00 |
| 10kg Mr.Goudas Ponni Boiled Rice | - $ 19.99 |
| 10kg Mr.Goudas Palakkedan matta Rice | - $ 19.99 |
| Grace Basmati Rice | - $ 9.99 |
| Aroy - D coconut Milk Tin 4 for | - $ 10.00 |
| Ashoka mongo Palp | - $ 2.99 |

| | |
|---|---|
| Dheepam Oil | - $ 7.99 |
| கத்தரிக்காய் | - $ 1.49 lb |
| Dramstick | - $ 4.99 lb |
| 1016 Bombay Onion | - 12.99 |
| Thai Eggplant | -1.99 lb |
| Indian Eggplant | - $ 1.99 lb |
| Thai Chilli | - $ 2.99 lb |
| Small Onion | - 5.99 lb |
| யாழ்ப்பாணத்து Rasavalli | - 5.99 lb |
| கருணைக்கிழங்கு | - 3.99 lb |
| Roma Tomato | - $1.99 lb |
| Beet Roots | - $ 00.99 lb |
| அப்பச் சட்டி | - $ 19.99 |
| இருந்து திருவும் திருவளை | - $ 20.00 |
| புட்டுப்பானை, மூடி | - $ 20.00 |
| இட்லி சட்டி | - $ 20.00 |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# வென்கூவரில் மீண்டும் இயங்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்09

வென்கூவரின் பேர்னபே பகுதியில் ஏழு வாரங்கள் நிறுத்தப்பட்டிருந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பார்க்லேண்ட் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திடீரென முன்னறிவிப்பின்றி ஏழு வாரங்களுக்கு மூடப்பட்டிருந்தது.

சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறு அடையாளம் காணப்பட்டு, திருத்தப்பட்டுள்ளதால் மார்ச் 10ஆம் திகதி முதல் மீண்டும் அதன் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அடுத்து சில வாரங்களுக்கு சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திர செயற்பாடுகள் மற்றும் வெளியேற் றப்படும் வாயு தொடர்பில் எச்சரிக்கை யாக இருக்கப் போவதாக பார்க்லேண்ட் முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

# வலுத்து வரும் யூத எதிர்ப்புத் தொடர்பில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடவடிக்கை

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்09

யூத சமுதாயத்திற்கு எதிரான யூத எதிர்ப்புத் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பிரிட்டிஷ் கொலம் பியாவின் முதல்வர் டேவிட் எபி தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில், சிவில் சமூகங்களில், தனியார் தொழில் வழங்குநர்களில் தொடங்கிய யூத எதிர்ப்பு நிலைப்பாடு, இறுதியாக பிரிட்டிஷ் கொலம்பியா அரசாங்கத்தின் பொதுச் சேவை வரை பரவியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சில யூத குழுக்களின் பிரதிநிதிகளை வெள்ளிக்கிழமை (மார்ச் 8) சந்தித்த எபி, இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

யூத எதிர்ப்பு சம்பவங்கள் தொடர்பில் குறித்த குழுக்கள் தமக்கு அறியத்தராத போதிலும், மனித உரிமைகள் சட்டத்தரணி என்ற அடிப்படையில் தம்மால் அதனைப் புரிந்துகொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான யூத எதிர்ப்பினை எதிர் கொண்டால் உடனடியாக தமக்கு அறியத் தருமாறு அவர் பொது மக்களிடம் கோரியுள்ளார்.





# காஸாவில் பலஸ்தீனியர்களுக்கு உதவும் ஐ.நா.அமைப்புக்கு கனடா நிதி வழங்கும்

ஒன்ராரியோ,மார்ச்09

காஸாவில் உள்ள பலஸ்தீனியர்களுக்கான ஐ.நாவின் உதவி நிறுவனத்திற்கு நிதியளிப்பதனை கனடா மீள ஆரம்பித்துள்ளது.

மார்ச் 8ஆம் திகதி ஊடகவியலாளர்களை சந்தித்த சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஹ்மட் உசைன் இதனை உறுதிப்படுத்தினார்.

ஐ.நாவின் உதவி நிறுவனத்தில் பணியாற்றுபவர்களில் பெரும்பாலானோர், ஹமாஸினால் இஸ்ரேல் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில் பங்குபற்றியவர்கள் என இஸ்ரேல் குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து கனடா உள்ளடங்கலாக 15 நாடுகள் ஏழு வாரங்களுக்கு முன்னர் இந்த நிறுவனத்திற்கான நிதியை நிறுத்தியிருந்தன.

ஐ.நா. நிறுவனத்திற்கான கனடாவின் அடுத்த கட்ட கொடுப்பனவு அடுத்த மாதமே வழங்கப்படவுள்ளதால், கனடாவின் நிதிநிறுத்த கொள்கையினால் கனடா எந்தவொரு நிதியளிப்பையும் தவறவிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நாவினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் பின்னர் இந்த நிறுவனத்திற்கு தொடர்ந்து நிதியளிக்கும் தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சர் உசைன் கூறியுள்ளார்.






# பிறம்டனில் தீ விபத்தின் பின்னர் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு!

ஒன்ராரியோ,மார்ச்09

பிறம்டன் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிறம்டன் பகுதியில் மார்ச் 8ஆம் திகதி நண்பகலில் வீடொன்றில் இடம்பெற்ற தீ விபத்தினை அடுத்தே இந்த மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் படுகொலை மற்றும் காணாமல் போனோர் விசாரணைகள் பணியகமானது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த மனித எச்சங்கள் எத்தனை பேருடையது என்பது குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

# வாகன விற்பனை நிலையம் ஒன்றை அனுமதிப் பத்திரமின்றி நடத்தியவர்

ஒன்ராரியோ, மார்ச்09

சேர்விஸ்ஒன்ராரியோ செயன்முறையில் இருந்த இடைவெளிகளை பயன்படுத்தி மோசடி செய்து வந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் 24 வயதானவர் எனவும், அனுமதிப் பத்திரமற்ற வாகன விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருந்தார் எனவும் பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

2023ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கும், 2024ஆம் ஆண்டு ஆரம்பம் வரைக்குமான காலப்பகுதியில் சேர்விஸ்ஒன்ராரியோ போக்குவரத்து அமைச்சின் ஊடாக நூறுக்கும் மேற்பட்ட போலிப் பரிமாற்றங்களை செய்தார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது மாபெரும் குற்றம் எனவும், பல்வேறு எல்லைக்குட்பட்ட வாகனங்களின் செயற்பாட்டை இது பாதித்துள்ளது எனவும். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தை பதிவு செய்தல், நிறம் மாற்றுதல், பயன்படுத்திய வாகன தகவல் விவரங்களைப் பெறுதல், அனுமதிப் பத்திரத்தின் பெயரை மாற்றல் மற்றும் வாகன இலக்கத் தகட்டினை மாற்றுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை மோசடியான வழியில் வைர் மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் குற்றம் சாட்டுகின்றனர்.



# சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட முன்னாள் கல்வி உதவியாளர் கைது



ஒன்ராரியோ,மார்ச்09

சிறுவர் துஷ்பிரயோக சம்பவத்தில் முன்னாள் கல்வி உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோல்டன் பகுதியில் நான்கு பாடசாலைகளில் கல்வி உதவியாளராக பணியாற்றிய 42 வயதான நபர் ஒருவரே, இணைய சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2014 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட பகுதியில் நான்கு பாடசாலைகளில் கல்வி உதவியாளராகப் பணியாற்றியுள்ளார்.

இது தவிர, குறித்த சந்தேகநபர் பிரத்தியே பியானோ கற்பித்தலிலும் ஈடுபட்டிருந்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரின் படத்தினை வெளியிட்டுள்ள பொலிஸார், சந்தேக நபரால் பாதிக்கப்பட்டவர்கள் வேறு யாரேனும் சமூகத்தில் இருந்தால், உடனடியாக பொலிஸாரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுகொண்டுள்ளனர்.

# கார்பன் வரி அதிகரிப்பு வேண்டாம் ஒன்ராரியோ முதல்வர் வலியுறுத்தல்

ஒன்ராரியோ,மார்ச்09

ஏப்ரலில் கார்பன் வரியை அதிகரிக்கும் தீர்மானத்தை நிறுத்துமாறு ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

மில்டன் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் மீது திணிக்கப்பட்ட மிகவும் மோசமான வரியே, காபன் வரி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் முதலாம் திகதியன்று காபன் வரியானது, 1 தொன்னிற்கு 15 டொலர்களால் அதிகரிக்கப்படவுள்ளது.

